**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சீர்காழி.**
**அசல் வழக்கு எண் 122 /2018**

PW1 –கிருஷ்ணன் த/பெ வரதன்
நாள்–05.12.2023

**குறுக்கு விசாரணை :**

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யபப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.

**2-ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் எத்தனை அயிட்ட சொத்துக்கு வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் இரண்டு அயிட்ட சொத்துக்களுக்கு தாக்கல் செய்துள்ளேன். தாவா முதல் அயிட்ட சொத்து சட்டநாத சுவாமி தேவஸ்தானத்துக்கு பாத்தியப்பட்டது என்றால் சரிதான். வா.சா.ஆ.1 ஆனது 2014 மற்றும் 2016-ம் ஆண்டுக்கானது என்றால் சரிதான். வா.சா.ஆ.2-ஆனது எதற்காக தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் குடியிருப்பு பகுதி என்பதற்காக தாக்கல் செய்யப்பட்டுள்ளது. வா.சா.ஆ.2-ஆனது 04.05.2010-ம் தேதியில் பெறப்பட்டது என்றால் சரிதான். வா.சா.ஆ.3 -ஆனது எதற்காக தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் ஏற்கனவே 1ம் பி ரதிவாதி அவரது மனைவியும் என்னை தாவா சொத்திலிருந்து வெளியேற்ற வழக்கு தாக்கல் செய்திருந்தார்கள். வா.சா.ஆ.3 மற்றும் வா.சா.ஆ.4 தாவா சொத்தில் எனது அனுபவத்தை காட்டகூடிய ஆவணம் அல்ல என்றால் சரியல்ல. அசல் வழக்கு எண் 35/2011-தீர்ப்புக்கு பின்னர் அல்லது அதற்கு முன்னர் ஆக்கிரமிக்க முயற்சித்தார்களா என்றால் தீர்ப்புக்கு பின்னர். வா.சா.ஆ.1-ல் வீடு, மனை பகுதி வாடகை என குறிப்பிட்டு ரசீது வழங்கப்படவில்லை என்றால் சரிதான். தாவா முதல் அயிட்ட சொத்தில் கூரை வீடும், மின் இணைப்பும் உள்ளதாக வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. தாவா 2-வது அயிட்ட சொத்து பட்டா சொத்தா அல்லது கோயில் சொத்தா என்றால் பட்டா சொத்து ஆகும். 3 மற்றும் 4வது பரிகாரமானது எதன் அடிப்படையில் கோரப்பட்டுள்ளது என்றால் வழக்கு நிலுவையில் இருந்த காலத்தில் ஆவணம் ஏற்பட்டதால் பரிகாரம் கோரப்பட்டுள்ளது. தாவா 1-வது அயிட்ட சொத்தை பொறுத்து நான் நேரடி பகுதிதாரர் கிடையாது என்றால் சரிதான். 2-வது அயிட்ட சொத்தை பொறுத்து நான் நேரடி பட்டதாரர் கிடையாது என்றால் சரிதான். 1 மற்றும் 2 அயிட்ட சொத்துக்களில் என்னுடைய சுவாதீனத்தை

நிரூபிக்கும் வகையில் ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் நேரடி பட்டாதராருக்கு எதிராக வழக்கில் கோரியுள்ள பரிகாரங்கள் சட்டப்படி நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. இதுநாள் வரையில் தாவா சொத்து 2-ம் பிரதிவாதியின் வசத்தில்தான் இருந்து வருகிறது என்றால் சரியல்ல. 2-ம் பிரதிவாதி எனது உறவினர் என்றால் சரிதான். எனக்கு மைத்துனர் ஆக வேண்டும். நான் நில அளவை துறையில் பணி புரிந்ததால் அதன் அடிப்படையில் பெற்ற ஆவணங்களை அடிப்படையில் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணங்கள் வழக்கிற்கு தொடர்பில்லாதது என்றால் சரியல்ல.

<u>மறுவிசாரணை</u> - இல்லை